செ.வெ.எண்: 39 நாள்: 14.03.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கருணை அடிப்படையில் ஒரு நபருக்கு சத்துணவு அமைப்பாளர் பணிக்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் சத்துணவுத்திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு கருணை அடிப்படையில் சத்துணவு அமைப்பாளருக்கான பணிநியமன ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.03.2017) வழங்கி கூறியதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆவணம் பெருங்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சத்துணவு திட்டத்தில் சமையலராக பணிபுரிந்த திருமதி.காவேரி என்பவர் 05.08.2013 அன்று பணியின்போது இயற்கை எய்தினார். அதனடிப்படையில் அவரது மகள் திருமதி.கீதா என்பவருக்கு அரிமளம் ஊராட்சி ஒன்றியம், தேனிப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கருணை அடிப்படையில் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிவதற்கான பணிநியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணி நியமன ஆணை பெறும் நபர் சிறப்பாக பணிபுரிய அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.முருகண்ணன், உதவி கணக்கு அலுவலர் (சத்துணவுத்திட்டம்) திருமதி.விஜயா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**